Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர் கால சிற்பக் கலைகள்

முனைவர் அ. கல்பனா
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்

40

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் பாதுகாப்பிற்கும் தலைவன் அரசன் கடமையை முழுமையாக செயல்படுத்த வேண்டும்.மன்னன் புகழ் இறந்த பின்பும் பேசப்பட வேண்டும் தனி மனிதன் மன்னன் இவர்கள் இருவரும் தங்கள் வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்து செல்லுதல் அவசியம். பல தலைமுறைகளை, நூற்றாண்டுகளை, கடந்து மன்னனின் திறமை உலகில் பேசப்படுகிறது என்பதற்கு பல்லவ மன்னர்கள் சாட்சியாக உள்ளனர். தங்களின் தனித் திறன் புதிய சிந்தனையை வரலாறு பேசும் அளவிற்கு விட்டுச் சென்றுள்ளனர் சிற்பக் கலை கட்டிடக்கலை இரண்டிலும் திறன் பெற்று விளங்கிய, பல்லவ மன்னர்கள் உலக புகழ்பெற்ற திகழ்கின்றனர்விலங்குகள் இறைவன் என எல்லாவற்றையும் தங்கள் சிற்பங்களின் மூலம் கட்டிடக்கலை திறனை வெளிப்படுத்தியுள்ளனர்.இவ்வாறாக தமிழகத்தின் வரலாற்றில் பல்லவ மன்னர்கள் அழியா புகழ் பெற்று விளங்குகின்றனர் என்பதனை உணர முடிகிறது.

**<u>முன்னுரை</u>**

மக்கள் மன நிறைவுடன் வாழ்வதற்கு மன்னனின் ஆட்சிமுறை அவசியமானது. மன்னனின் செயல்பாடுகளால் எண்ணற்ற வளர்ச்சி பாதைக்கு மக்களை கொண்டு செல்ல முடியும். அரசனால் உருவாக்கப்படும் திட்டப்பணிகள் மக்களைச் சென்று சேர்வதனை உறுதி செய்ய வேண்டும். எண்ணற்ற தலைவன், மன்னனை இவ்வுலகம் கண்டுள்ளது.இன்றைய நாளில் தன் கடின உழைப்பினால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் தலைவர்களை காண முடிகிறது நாட்டில் கொலை, வன்முறை நிகழாத ஒரு ஆட்சி முறை வேண்டும். மக்களிடம் உள்ள உடமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இதனைப் பற்றி வள்ளுவர், கொலை மேற்கொண்ட திருக்குறள்

**கொலை மேற்கொண்டாரின் கொடிதே- அலை மேற்கொண்டு அல்லவைசெய்து ஒழுகும் வேந்து**

குடி மக்களின் பொருள் மீது ஆசை கொண்டு அவர்களை துன்புறுத்தி தவறாக ஆளும் அரசு பகை கொண்டு பிறரை கொலை செய்பவரை காட்டிலும் பெரியது ஒவ்வொரு காலகட்டத்திலும் தனி மனிதனுக்கும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பெரிதும் துணையாவது நாட்டின் மக்களாட்சி முறையே ஆகும் ஆகும் தமிழ்நாட்டின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மன்னர்கள் ஆட்சி புரிந்து ஆட்சி புரிந்து தங்கள் ஆட்சித்திறன் படைப்புத்திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர் சங்ககால மன்னர்கள் நாயக்கர் பல்லவர் முகலாயர்கள் என பல்வேறு மன்னர்களைப் பற்றி வரலாறு குறிப்பிடுகிறது

இவர்களின் வாழ்க்கை முறை வரலாறாக இன்றளவும் உள்ளவற்றுக்கான காரணங்கள் அவர்களின் படைப்புகள் ஆகும். கல்வி வளர்ச்சி கோயில்களில் ஓவியம் சிற்பங்களின் மூலம் திறனை தனித்திறனை வெளிப்படுத்திய விதம் எனலாம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**பல்லவர் காலம்**

பல்லவர் காலம் வரலாற்றின் அழிவு பெறாத நிலைத்து நிற்கும் காலகட்டம் கிபி 600900 ஆண்டுகளின் பிற்பகுதி இடைப்பட்ட காலம் எனலாம்.

சங்கம் மருவிய காலத்தினை அடுத்து பல்லவர் காலம் மக்களிடையே சில நிகழ்வுகள் மாற்றத்தினை பெறுகின்றனர் இலங்கையை மணி டிவியில் இருந்து வந்தவர்கள் தொண்டை பழங்குடிகள் பல்லவர்கள் எனும் பாரசீக மரபினர் என்று பல்வேறு கருத்துக்கள் உண்டு.

**பல்லவர்கள் வம்சம்**

முற்காலம் இடைக்காலம் பிற்காலம் என ஒவ்வொரு காலகட்டங்களின்

பல்லவர் வம்சம் காணப்படுகிறது. பிற்கால பல்லவர்களின் முதலாம் மகேந்திரவர்மன் முதலாம் நரசிம்ம வர்மன் இரண்டாம் மகேந்திரவர்மன் குறிப்பிடத்தக்க மன்னர்களாக பார்க்கப்படுகின்றனர். இத்தகைய பல்லவ மன்னர்கள் புகழ் பெற்று விளங்கினர். கலைகளில் சிறப்பு பெற்று திகழ்ந்தனர்.

**கலைகள்**

மனிதன் தன்னை மகிழ்வித்துக்கொள்ள எண்ணற்ற கலைகளை உருவாக்கிக் கொள்கிறான். இசை ஆடல் பாடல் ஓவியம் போன்று இன்னும் எண்ணற்றவை .அழகு கலைகள் ஐந்து வகைப்படும் என்கிறார் மயிலை சீனி வேங்கட சாமி. அவை கட்டடக்கலை சிற்பக்கலை ஓவியக்கலை இசை கலை காவியக்கலை எனப்படும்.



**சிற்பக்கலை வகைகள்**

முழு உருவச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் சிற்பங்கள் எனப்படும். முன்புறம் பின்புறம் உட்பட முழு உருவமும் தெரிய அமைக்கப்படுவது புடைப்பு சிற்பம் என்பது பொருட்களின் ஒருபுறம் மட்டுமே தெரியும் படி சுவர்களிலும் கல்லிலும் அமைக்கப்படுவது.

தமிழ்நாட்டில் பல்வேறு சிற்ப மரபு, சோழர்கள் சிற்ப மரபு, பாண்டியர் சிற்ப மரபு விஜயநகர சிற்ப மரபு என்று பேசுவதுண்டு.

**கங்காதர சிற்பம்**

மகேந்திரன் தன்னையே சிவனாக வடித்ததால், சிவனுக்கு அரச வடிவம் தந்து சிற்பம் ஆக்கியுள்ளான். மன்னன் தெய்வமாக காணப்படுகிறான் சுடு மண்ணாலும் மரத்தாலும் சிற்பங்கள் செய்யப்பட்ட பிறகு கருங்கற்களில் உருவங்கள் செய்யப்பட்டன இவற்றை நடு கற்கள் என்று கூறுவர். உயிர் நீத்த

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

வீரர் உடன்கட்டை ஏறிய பெண்களுக்காகவே வைக்கப்பட்டது நடு கற்கள்.
நடுத்தற்களில் உருவம் பொறிப்பது சிற்பக்கலை தொடக்கம்
இறைவனை கருங்கற்களில் உருவாக்கியது பல்லவர் காலம்.



**குடைவரை கோயில்**

பல்லவர்கள் தமிழ்நாட்டில் பல்லாவரம் திருச்சி மண்டகப்பட்டு போன்ற பகுதிகளில் குடைவரைக் கோவில்கள் அமைத்துள்ளனர் உலகின் இன்றளவும் வியக்கும் வகையில் குடைவரைக் கோவில்கள் காணப்படுகின்றன.

மகேந்திரவர்மன் காலத்தில், கட்டிட முறையில் புதிய முறை தோற்றுவித்தான். பாறை கல் இவைகளை தச்சர் கொண்டு குடைந்து குகை கோயில்களை அமைத்தான்.

இத்தகைய குகை கோயில்களில் இறைவனின் உருவங்கள் சிற்பங்களாக உருவாக்கப்பட்டது.

சங்க கால கோயில்கள் செங்கல் சுண்ணாம்பு இவற்றால் ஆனது. காலத்தால் அழியும் தன்மை கொண்டது. மகேந்திரவர்மன் அக்கட்டிட அமைப்பிலிருந்து மாறுபட்டு நிலையான படைப்பை உருவாக்கினார்.

திருச்சியில் உச்சி பிள்ளையார் கோயில் மலைத்தடத்தில் உடையப்பட்ட கோயில் ஒரு பக்கம் உள்ளறை எதிர்பக்கம் தெய்வமாடமும் உருவாக்கப்பட்டுள்ளன. நரசிம்மன் முதலாம் ராஜசிம்மன் நந்திவர்மன் போன்ற மன்னர்களின் காலத்திலும் குடவரைக் கோயில் அமைப்பில் பின்பற்றப்பட்டது.

**கற்கோயில்கள்**

பல்லவர்கள் மலையை குடைந்து அரைக்கோயில்களை உருவாக்கினர் குண்டு பாறைகளையும் சிறிய குன்றுகளையும் உளியால் செதுக்கி ஒற்றை கற்க கோயில்களையும் படைத்துள்ளனர்.

கடற்கரையை ஒட்டி இயற்கையாக அமைந்துள்ள பாறைகளையும் குன்றுகளையும் செதுக்கி சிறப்பான கடற்கரை கோயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன

பல்லவன் மன்னன் பரமேஸ்வரனுக்கு பிறகு அவன் மகன்
ராஜசிம்மன் காலத்தில்தான் கருங்கல் கட்டிடகோயில்கள்
கட்டப்பட்டுள்ளன

மாமல்லபுரம் கடற்கரை கோயில் மற்றும் பஞ்சபாண்டவர் ரதங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை மாமல்லையில் சிற்பங்களில் ஒன்று நிலத்தில் கிடக்கும் பாறையில் விஷ்ணுவின் கிடந்த கோலத்தை வடித்திருக்கும்
சிற்பம் காணப்படுகிறது.

**சிங்கவரம் குடவரை கோயில்**

செஞ்சிக்கு அருகில் இருக்கும் சிங்கவரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது கிடந்த கோலத்தில் சிங்கப்பெருமாளுக்கு எடுப்பித்த கோயில் துர்க்கை சிற்பம் மிக அழகானது.

**முடிவுரை**

பல்லவ மன்னர்களின் தனித் திறனுக்கு உதாரணமாக வரலாற்றின் எண்ணற்ற படைப்புகளை காண முடிகிறது. மண்ணுலகில் மனிதன் வாழும் காலம் முடிந்த பின்பும் எதிர்வரும் தலைமுறை போற்றி வணங்கும் அளவிற்கு சிறப்புடன் அமைந்துள்ளது
எதிர்காலத் தலைமுறைகள் இவற்றினை பாதுகாத்திட வேண்டும். தனி மனிதன் தன்னுடைய படைப்புகளை இவ்வாறாக சிறப்புடன் உருவாக்கிட வேண்டும் என்பதனை உணர வேண்டும்

**துணைநூல் பட்டியல்**

**திருவள்ளுவர், திருக்குறள், குறள் எண் 551**
**மயிலை சீனி வேங்கடசாமி தமிழர் வளர்ந்த அழகு கலைகள்**
**பாவை பப்ளிகேஷன் (2008 ஆகஸ்ட்)**
**பல்லவர் கால சிற்பக்கலை, துரை சுந்தரம்**